# உடன்பிறப்பே... 86

**நீரை.மகேந்திரன்**

**தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த 'மாவீரர்' மாங்குடி மதியழகன் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.**



ஓவியம் : ரவி பேலட்

# 'மாவீரர்' மாங்குடி மதியழகன்!

1976-ஆம் ஆண்டு, ஜனவரி 31 அன்று கழகத்தின் ஆட்சி கலைக்கப்பட்டபோது, அடுத்தடுத்த நாட்களில் எந்தச் சஞ்சலமும் இல்லாமல் முரசொலியில் 'உடன்பிறப்பே' கடிதங்கள் எழுதினார் முத்தமிழறிஞர் கலைஞர். ஆட்சிக் கலைப்புக்கு அடுத்த நாள் 'அண்ணா வழியில் அமைதி காத்திடுவோம்' என்றும், 6-ஆம் தேதி 'காலம் வழங்கிய அருட்கொடை' என்றும், 8-ஆம் தேதி 'அரசியல் பண்பாடு காப்போம்' என்றும், 9-ஆம் தேதி 'வீரத்திற்கான விளக்கம்' என்றும் அடுத்தடுத்த நாட்களில் அவர் எழுதிய கடிதங்கள் கழகத்தினரின் வருத்தங்களை, வலிகளை ஆற்றுப்படுத்தும் வகையிலும், கட்டுப்பாட்டுடன் ஆற்ற வேண்டிய கடமைகளை வலியுறுத்தியும் வந்தன. அந்தக் கடிதங்களில் 'வீரத்திற்கான விளக்கத்தில்' அவர் நினைவுகூர்ந்த கழக முன்னோடி 'மாங்குடி மதியழகன்'. குறிப்பாக, **'மாவீரர்' மாங்குடி மதியழகன்** என அடையாளப்படுத்தி இருப்பார்.

1974-ஆம் ஆண்டு மறைந்த மாங்குடி மதியழகனை நினைவில் வைத்து, அதற்கு முன்னரே ராமநாதபுரம் மாவட்டத்தில், முதுகுளத்தூர் பகுதியில், மதியழகன் ஏற்பாடு செய்த கூட்டத்தில் பேசியவற்றை அந்தக் கடிதத்தில் பகிர்ந்திருந்தார். அந்தக் கூட்டத்தில் மதியழகனைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு அவர் ஆற்றிய உரையில், "இன்றைய கால கட்டத்தில் வாள்கொண்டோ வேல்கொண்டோ தாக்குவது அல்ல வீரம், குளத்தில் விழுந்த குழந்தையை ஓடிச்சென்று காப்பாற்றுவதுதான் வீரம்" என வீரத்துக்கான புதிய விளக்கத்தை அளித்து, வன்முறையைக் களைந்துவிட்டு 'நன்முறை'களைக் கடைபிடிக்க நம்மை நாமே அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்" என முழங்கினார்.

### நன்முறைப் பாதைக்கு வழி

மதியழகனை மாவீரர் என போற்றியதும், முதுகுளத்தூர் கூட்டத்தில் நன்முறைப் பாதைக்கு விளக்கம் அளித்ததும் தற்செயலானது அல்ல; அந்தக் காலகட்டத்தைக் கணக்கிட்டால், அன்றைய ராமநாதபுரம் மாவட்டம் கமுதி, முதுகுளத்தூர் பகுதிகளில் கழகம் வளர்ப்பது சாதாரணமானது அல்ல, பல தியாகங்களுக்குத் தயாராக இருக்க வேண்டும் என்பது இயல்பாகப் புரியும். அப்படியான தியாக வாழ்க்கை வாழ்ந்தவர் மதியழகன்.

இன்றைய ராமநாதபுரம் மாவட்டம், கமுதியில் இருந்து முதுகுளத்தூர் செல்லும் வழியில் உள்ள பேரையூர் அருகில் உள்ள கிராமம் மாங்குடி. அதுதான் மதியழகன் அவர்களின் பூர்வீகம். 1931-ஆம் ஆண்டு பிறந்தவர். பெற்றோர் இருளாண்டி - முத்தொளி ளாயி. இவர் பிறந்த சில ஆண்டுகளிலேயே பெற்றோர் பர்மாவுக்கு இடம்பெயர்ந்தனர். அங்குதான் அவரது இளமைக்காலம் முழுவதும் இருந்தார். ஆனால், கல்வியும் அரசியலும் தமிழும், தமிழ்நாடுமாக இருந்ததைக் குறிப்புகள் சொல்கின்றன.

1954-ஆம் ஆண்டு, தந்தை பெரியார் பர்மாவுக்கு அனைத்துலக புத்த சமய மாநாட்டுக்கு, அண்ணல் அம்பேத்கர் அழைப்பின்பேரில் சென்றார். அங்கு, திராவிடர் கழகம் கிடையாது. திராவிட முன்னேற்றக் கழகம் செயல்பட்டது. அவர்கள்தான் பெரியாருக்குப் பிரமாண்ட வரவேற்பு அளித்து பல நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து, பெரியாரைப் பல இடங்களில் உரையாற்ற வைத்தனர். அந்த ஏற்பாட்டாளர்களில் முக்கியமான பிரமுகர் மதியழகன். அன்று பர்மா தி.மு.கழகப் பொதுச் செயலாளராக இருந்த நாரா நாச்சியப்பன் எழுதிய 'பர்மாவில் பெரியார்' நூலில், முதல் பக்கத்திலேயே, தேனீக்களைப் போல ஓடி ஓடி உழைத்த தோழர்கள் என மதியழகனையும் குறிப்பிட்டுள்ளார்.

### தமிழ்நாட்டில் அரசியல்

தனது 18-வது வயதிலிருந்தே பர்மா தி.மு.கழகத்தில் பணியாற்றத் தொடங்கிய மதியழகன், 1959-ஆம் ஆண்டு வாக்கில் குடும்பத்துடன் தமிழ்நாடு திரும்பினர். இங்கு வந்தபின்னர், முதுகுளத்தூர் பகுதியில் கழகச் செயல்பாடுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அந்தக் காலகட்டம் அப்பகுதியில் காங்கிரஸும், பார்வர்ட் பிளாக் கட்சியும் செல்வாக்கு செலுத்தி வந்தன. ஒன்றுபட்ட ராமநாதபுரம் மாவட்டச் செயலாளராகவும், அமைப்புச் செயலாளராகவும் இருந்த எஸ்.எஸ். தென்னரசு அவர்களின் துணையோடு, அந்தக் களத்தில் கழக அரசியலை முன்னெடுத்தவர் மதியழகன். கழகம் அறிவித்த அத்தனைப் போராட்டங்களிலும், முன்னணியில் நின்றவர்.

1960-ஆம் ஆண்டு வாக்கில், முதுகுளத்தூர் வட்டக் கழகச் செயலாளராகவும், பின்னர் ஒருங்கிணைந்த ராமநாதபுரம் மாவட்ட துணைச் செயலாளராகவும், பொறுப்பு வகித்து, பேரறிஞர் அண்ணா, கலைஞரின் நம்பிக்கைக்கும் நெருக்கமானவராக இருந்தார். 1968-ஆம் ஆண்டு வட்டக் கழகத் தேர்தலில் அவர் வெற்றிபெற்ற குறிப்பினை, அப்போது கழக ஏடாக இருந்த 'நம்நாடு' வெளியிட்டுள்ளது.

**2019-ஆம் ஆண்டு பரமக்குடியில் நாடாளுமன்ற வேட்பாளர் அறிமுகக் கூட்டத்தின்போது தோரண வாயிலுக்கு 'மாங்குடி மதியழகன் நுழைவாயில்' எனப் பெயரிட்டனர் கழகத்தினர்.**

1964-ஆம் ஆண்டு சட்டநகல் எரிப்புப் போராட்டத்தில், கைது செய்யப்பட்டு மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். அந்த ஆண்டு டிசம்பர் 16 அன்று விடுதலை செய்யப்பட்டபோது, அவரோடு விடுதலையான குழுவினரை வரவேற்க, கலைஞர் நேரில் சென்றிருந்தார். ஆனால், விடுதலை செய்யப்படும் நேரம் மாறிய நிலையில், அன்று மாலை மானாமதுரை பொதுக்கூட்டத்தில் மதியழகனை வாரி அணைத்து, அன்பு மழை பொழிந்துள்ளார் கலைஞர். அதேவழக்கில் சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஒருங்கிணைந்த ராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் எஸ்.எஸ்.தென்னரசு அவர்கள், 1965-ஆம் ஆண்டு, ஜூன் மாதம் விடுதலையானபோது பேரறிஞர் அண்ணா, கலைஞர், சத்தியவாணிமுத்து, என்.வி.என், அன்பில் தர்மலிங்கம் என முன்னோடிகளே மாலையுடன் திரண்டு நின்றனர். அவர்களை ராமநாதபுரம் மாவட்ட துணைச் செயலாளராக முன்நின்று ஒருங்கிணைத்துக் கொண்டிருந்தவர் மதியழகன்.

### கழகப் பொறுப்புகளும் களப் பொறுப்புகளும்

பலமான போட்டிகள், எதிர் அரசியல் சக்திகளையும் மீறி, அனைத்துத் தரப்பு மக்களின் ஆதரவுடன் முதுகுளத்தூர் ஒன்றியப் பெருந்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர் மதியழகன். 1969-ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சிக் காலத்தில் மாநில பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டார். முதுகுளத்தூர் நில வள வங்கித் தலைவராகவும், ஆனையூர் கூட்டுறவு வங்கித் தலைவராகவும் பொறுப்பு வகித்து கழக உணர்வுடன் அப்பகுதி மக்களுக்கு அரசின் திட்டங்களைக் கொண்டு சேர்த்தவர். அவர் முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராக இருந்த காலத்தில், அப்பகுதிகளில் ஆரம்பப் பள்ளி, நடுநிலைப் பள்ளிகள் அமைப்பது, பள்ளிகளுக்குப் புதிய கட்டடங்கள் என 'வன்முறைப் பாதைக்கு மக்கள் போகாமல் 'நன்முறைப் பாதைக்கு' வழி கண்டார்.

அண்ணா மறைந்தபோது, முதுகுளத்தூரில் அனைத்துக் கட்சி சார்பில் அமைதி ஊர்வலமும், பொதுக்கூட்டமும் நடத்தி, அதுநாள் வரையில் எதிர் அரசியல் செய்து கொண்டிருந்தவர்களை 'தமிழரசு படைத்திட்ட தன்மான மறவன்' எனப் புகழ்பாட வைத்தவர்.

1971-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் வலுவான எதிர் வேட்பாளர்களுக்கு எதிராக, சுயேட்சை வேட்பாளரை நிறுத்தி வெற்றிபெற வைத்து, அவரை கலைஞரிடம் கொண்டு வந்து நிறுத்தித் கழக உறுப்பினராக்கிய வலுவான கொள்கைவாதி மதியழகன்.

தென்மண்டலத்தில் பலரும் கட்சி மாறிய நிலையில், கலைஞரின் கரம் பற்றி வலுவாக நின்று, கழகப்பணியே குறிக்கோளாக இருந்த மதியழகன், தனது மூன்று மகன்களுக்கு, 'பர்மா கழக முன்னோடி'யான உதயண்ணன் பெயரையும் தன்னைக் கவர்ந்த நாயகர்களான 'மருது பாண்டியன்', 'தென்னரசு' என்கிற பெயர்களையும் சூட்டி, தனது சிந்தனைத் தெளிவினை பறைசாற்றியவர். எதிர்பாராத விதமாக 1974-ஆம் ஆண்டில் இயற்கை எய்தினார். அதன்பின்னர், அவர் மகன் திருமணம் நடைபெற்றபோது, கலைஞர் வருகை தந்து வாழ்த்தியதே அவர் மனதில் மதியழகனுக்கு அளித்த இடம் எனலாம். கழகத்தின் சோதனையான காலகட்டங்களில் உடன் நின்ற மதியழகனைப் போலவே அவரின் தம்பி நடராசனையும், மிசா காலத்தில் கைது செய்து சிறையிலடைத்தனர்.

மதியழகன் மறைந்து 45 ஆண்டுகள் கடந்த நிலையில், 2019-ஆம் ஆண்டு பரமக்குடியில் நாடாளுமன்ற வேட்பாளர் அறிமுகக் கூட்டத்தின்போது தோரண வாயிலுக்கு 'மாங்குடி மதியழகன் நுழைவாயில்' எனப் பெயரிட்டனர் கழகத்தினர். கழகம் என்றென்றைக்கும் 'நன்முறை' செய்தோரை மறக்காது என்பதற்கு அதுதான் சான்று!

...துடிக்கும்

### பாம்பன் பாலமும் பாதுகாப்புக் குறைபாடுகளும்...

தமிழ்நாட்டின் பொறியியல் அதிசயமாக இருந்து வந்தது 'பாம்பன் பாலம்'. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டு, நூற்றாண்டுகளைக் கடந்த நிலையில் போக்குவரத்துக்கு உகந்ததாக இல்லை என, 2019-ஆம் ஆண்டு புதிய பாலம் கட்ட திட்டமிடப்பட்டுப் பணிகளைத் தொடங்கியது ஒன்றிய அரசு. தற்போது, கட்டி முடிக்கப்பட்டுள்ள ரயில்வே பாலம், பாதுகாப்புக் குறைபாடுகளுடன் உள்ளதாக புதிய சர்ச்சை எழுந்துள்ளது.

ரூ. 545 கோடி செலவில், 101 தூண்களுடன் கட்டப்பட்டு, திறப்பதற்குத் தயாராக இருக்கும் இந்தப் பாலத்தில், கடந்த சில மாதங்களாகச் சோதனை ஓட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாகக் கடந்த 13 மற்றும் 14 தேதிகளில், ரயில்வே பாதுகாப்பு ஆணையர் ஏ.எம்.சவுத்ரி ஆய்வு செய்தார். அவர் அளித்துள்ள அறிக்கையில், பாலத்தில் பாதுகாப்பு குறைந்திருப்பதாகவும், குறைபாடுகளுடன் பாலம் கட்டப்பட்டுள்ளது என்றும் கூறியிருக்கிறார்.

'பாம்பன் பாலம் கடல்நீரின் ஈரப்பதத்திற்கும், காற்றின் தாக்கத்திற்கும், ரயிலின் வேகத்திற்கும் ஈடுகொடுக்கும் வகையில் கட்டப்பட வேண்டிய கட்டுமானத் தொழில்நுட்பமாகும். ஆனால், தூக்குப்பாலப் பகுதி ரயில்வேயின் 'ஆராய்ச்சி வடிவமைப்பு மற்றும் தர நிர்ணய அமைப்பின் (RDSO)' ஒப்புதல் இல்லாமல் வேறு வடிவமைப்பு விதிகளைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது' என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இப்போது, இது தொடர்பாக விசாரணை செய்ய ஐந்து பேர் கொண்ட தொழில்நுட்பக் குழுவை, ரயில்வே வாரியம் அறிவித்துள்ளது. இதன்மூலம் அந்த வழித்தடத்தில் தினமும் பயணிக்க உள்ள ஆயிரக்கணக்கான மக்களின் உயிரை அலட்சியப்படுத்தி இருக்கின்றனர் என்பது, வெட்ட வெளிச்சமாகி உள்ளது.

2022-ஆம் ஆண்டில் 'மோர்பி தொங்கு பாலம்' விபத்து மறக்காத நிலையில், நாட்டில் தினமும் ரயில்வே விபத்துகள் தொடர்கதையாக உள்ள நிலையில், பாம்பன் பாலத்தில் காட்டப்பட்டுள்ள அலட்சியம் கடும் அதிர்ச்சிகளை உருவாக்கி இருக்கிறது. இதுதான் குஜராத் மாடலோ?

### :ப்ளாஷ்பேக்



**மறக்க முடியாத புகைப்படம்!**



கு.பா.ராமஜெயம்

1988-ஆம் ஆண்டு வாக்கில், ஒருங்கிணைந்த விருதுநகர் மாவட்டத்தின் இளைஞர் அணி அமைப்பாளராக எனது கணவர் கு.பாலசுப்பிரமணியன் பொறுப்பு வகித்து வந்தார். அப்போது, நான் தமிழிசையில் முதுகலைப் பட்டம் பெற்று, இசை ஆசிரியையாகப் பள்ளிக்கூடமொன்றில் பணியாற்றி வந்தேன். இருவரும் விரும்பி மணம் செய்து கொண்டோம். எங்கள் திருமணம் நடந்த ஒரு சில மாதங்களில் ராஜபாளையத்துக்கு கழக இளைஞர் அணி நிகழ்ச்சிக்காக, இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்கள் வருகை தந்திருந்தார். என்னையும் அழைத்துச் சென்று, தளபதி அவர்களிடம் வாழ்த்துப் பெற்றார் என் கணவர். தற்போது நினைவில் மட்டுமே எஞ்சியிருக்கும் என் கணவரை, இந்தப் புகைப்படத்தில் பார்ப்பது அன்றைய நாட்களைத் திரும்பிப் பார்க்க வைக்கிறது. இதை, என் வாழ்வில் மறக்க முடியாத புகைப்படமாகப் பாதுகாத்து வருகிறேன். முன்னாள் அமைச்சர் தங்கவேலு உடன் இருக்கிறார்.

**- கு.பா.ராமஜெயம், ராஜபாளையம், விருதுநகர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

### கருவூலம்


**திராவிட மாணவர் பயிற்சி முகாம்!**

1944-ஆம் ஆண்டு, ஏப்ரல் 16 மற்றும் 17 தேதிகளில், 'திராவிட மாணவர்கள் முதலாவது பயிற்சி முகாம்' ஈரோட்டில், தந்தை பெரியார் மாளிகையில் நடைபெற்றது. பெரும்பான்மையான மாணவர்கள் கலந்துகொள்வதற்காக, பெரியாரின் தனிச் செயலாளர் எஸ்.கஜேந்திரன் பல ஊர்களுக்கும் நேரில் சென்று மாணவர்களுக்கு அழைப்பு விடுத்தார். நிகழ்ச்சிக்கு, பேரறிஞர் அண்ணா பொறுப்பேற்று, மேடையில் பேசுவதற்கும், கழகக் கொள்கைகளை விளக்குவதற்குமாக, இரண்டு நாட்கள் பயிற்சி வகுப்புகளை நடத்தினார்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

675

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.